கல்வி நிதிக்காக......

இதழின் விலை : ரூ.2.50

# குருகுலத் தென்றல்



- ✱ அடிப்படைவாத ஆன்மீகம் ✗
- ✱ அரசியல் ✗ ஆன்மீகம்
- ✱ அறிவியல் ✓ ஆன்மீகம்

தீபம் - 9
சுடர் - 31
09-05-2026

மகாகவி காளிதாசன்

வல்லமை தாராயோ – இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே

ஆசிரியர் : டாக்டர்.V.K.S.சிவசக்தி பாலன் M.B.B.S.,Dc.C.H.,


R. Karthik Prabhu M.S.,
V. Ravindran B.Com
S. Velayutham & Co.,

99449 70954
99449 70951
99449 70953

VELAYUTHAM TRADING COMPANY

S. VELAYUTHAM & Co

பட்டாசு மூலப்பொருட்கள் வியாபாரம்

Business in : Fireworks Raw Materials.

e-mail : velayuthamravi75@gmail.com

3/666/38, Sattur Main Road, Sivakasi - 626 189.

सेन्थिल

Enjoy Your Memorable Moments with...

# SENTHIL'S

## Fancy Fireworks & Crackers



KALAIMAAN™ REGD. NO: 2392499

LEO BRAND

## SENTHIL FIREWORKS INDUSTRIES

411-A, Kamarajar Road, Sivakasi - 626123.
Ph : 04562 221394, 2223941
Email : senthilfw@yahoo.com

# கன்னித்தமிழ் பாரம்பரியம் - 4

**(04-12-2025 அன்று சிவகாசி கார்த்திக் பாலிபேக் வளாகத்தில் நடைபெற்ற சிவகாசி சமஸ்கார் பாரதி - தமிழ்நாடு சார்பில் நடைபெற்ற மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் பிறந்த தின கவியரங்கத்தில் குருகுலத்தென்றல் ஆசிரியர் V.K.S.சிவசக்திபாலன் வழங்கிய தலைமையுரை,)**

எதுகை, மோனையுடன் அடுக்கு மொழியில் வசனங்கள் எழுதி அதை பல வரிகளாய் பிரித்து எழுதி விட்டால் அது கவிதையா?

கவிச் சக்கரவர்த்தி கம்பனின் கால் தூசிக்குக் கூட இவர்கள் பெற மாட்டார்கள் எனபதை நாம் என்று உணர்கின்றோமோ அன்று தான் தெய்வத் தமிழின் உன்னதத்தை நாம் அறிய முடியும்.

கவிச் சக்கரவர்த்தி கம்பனின் மகன் அம்பிகாபதி சோழ மன்னனின் மகள் அமராவதி இருவருக்கும் இடையே காதல்.

எந்தவொரு தடங்கல் – தாமதம் – தடுமாற்றம் இன்றி 100 பாடல்களை யாப்பிலக்கண சீர் வரிசையுடன் பாடினால் மன்னரின் மகள் அமராவதியை மணந்து கொள்ளலாம் என்று அவர்களின் காதலுக்கு நிபந்தனை விதிக்கப் பட்டது.

கவிச் சக்கரவர்த்தி கம்பனின் மகன் அம்பிகாபதி நிபந்தனையை ஏற்றான்.

அரச சபையில் போட்டியை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

அரச சபையின் மேல் மாடத்தில் – உங்களின் பாடல்களை இரசித்துக் கேட்டுக் கொண்டிருப்பேன் – நீங்கள் 100வது பாடலை பாடியவுடன் நான் எழுந்து வந்து உங்களுக்கு மாலை இடுவேன் – என்று மன்னனின் மகள் கூறினாள்.

உடனே –

கம்பனின் மகன் – நான் 100 பாடல்களைப் பாடி முடித்தவுடன் மேல் மாடத்தில் உன் முகம் தெரிந்தவுடன் உன்னைப் பற்றி ஒரு பாடல் பாடுவேன் என்று கூறினான்.

போட்டி துவங்கியது.

அம்பிகாபதி முதலில் இறை வணக்கமாய் ஒரு பாடலைப் பாடினான். இறை வணக்கப் பாடல் என்பதால் சபையோர் யாரும் அதைக் கணக்கில் சேர்க்கவில்லை. ஆனால் மன்னனின் மகள் அமராவதி அது பற்றிய புரிதல் இல்லாமல் அதை முதல் பாடலாய் கணக்கிட்டாள்.

அடுத்து 99 பாடல்கள் அற்புதமாய் அவன் நாவிலிருந்து அருவியாய் வெளி வந்தன. இறை வணக்கப் பாடலையும் சேர்த்து கணக்கிட்டதால் மன்னனின் மகள் அம்பிகாபதி 100 பாடல்களை நிறைவு செய்து விட்டதாய் எண்ணி வெற்றிக் களிப்பில் மேல் மாடத்தில் தோன்றினாள்.

உடனே –

அம்பிகாபதி அவள் மீது அடுத்த பாடல் பாடத் தொடங்கினான்.

நிபந்தனையின் படி தொடர்ந்து 100 பாடல்கள் பாடவில்லை என்று சபை யோர்கள் தீர்ப்பளித்து அம்பிகாபதிக்கு மரண தண்டனை அளித்தார்கள்.

இந்த கதையின் முடிவு சோகமானதாய் இருக்கலாம் – ஆனால் அது பற்றி விவாதிக்க நான் விரும்பவில்லை.

எவ்வித தடங்கலும் இன்றி – தாமதமும் இன்றி – தடுமாற்றமும் இன்றி தொடர்ந்து அம்பிகாபதி 100 பாடல்கள் பாடினான். அதையே சுட்டிக் காட்ட நான் விரும்புகின்றேன்.

– அதுவே தெய்வத்தமிழின் சிறப்பு

– அதுவே நமது கன்னித்தமிழின் பாரம்பரியம்

நமது தாய் மொழி தமிழின் தெய்வீக தன்மையையும் – அதன் உன்னதமான பாரம்பரியத்தையும் இன்று இழந்து போய் நிற்கின்றோம். ஆனால் தமிழ் எங்களள் உயிர்மூச்சு என்றும் நான் தமிழன்டா என்றும் கம்பு சுற்றிக் கொண்டிருக்கின்றோம் – இன்று யார் வாயிலிருந்தாவது தெய்வத்தமிழ் வெளிப்படுகின்றதா?

இதுவே நமது வீழ்ச்சியின் வெளிப்பாடு.

திருநாவுக்கரசர் – திருஞானசம்பந்தர் – மாணிக்கவாசகர்– சுந்தரர் – போன்ற நமது முந்தைய தமிழ்புலவர்கள் நாவிலிருந்து அருவியாய் வெளி வந்த நமது தமிழ் மொழியின் தெய்வதன்மை –யை மீண்டும் அரங்கேற்ற முயற்சிப்போம். அதுவே நமது கன்னித் தமிழுக்கு நாம் செய்யும் மகத்தான தொண்டாகும் என்று கூறி எனது உரையை முடிக்கின்றேன்.

**முகப்புத் தென்றல்**

## மகாகவி காளிதாசன்

காளிதாசன் நிகரற்ற கவி. சிறந்த நாடகப் புலமை வாய்ந்தவர்.

கி. பி. 1600களிலேயே இவரின் படைப்புகள் ஜெர்மனி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இவ்வளவு புகழ்வாய்ந்த காளிதாசன் ஆரம்பத்தில் ஒரு அறிவுத் திறன் இல்லாத மூடனாக இருந்து, பின் காளியின் அருளால் கவித்திறன் பெற்றவர்.

காளிதாசன் வாழ்க்கையே மிகவும் சுவாரசியம் வாய்ந்தது. அவரின் வாழ்க்கை வரலாற்றின் சில சுவாரசியமான சம்பவங்களைப் பார்ப்போம்.

இன்றைய நாட்களில் பாட்னா என்று அழைக்கப்படும் பாடலிபுத்ரா நகரத்தில் ஆடு மேய்க்கும் ஒரு தம்பதிக்கு மகனாகப் பிறந்தார்.

பிறந்ததில் இருந்தே அறிவுத்திறன் மிகவும் குறைவானவராகவே இருந்தார். சிறுவனாக இருந்தபோது. ஒரு மரத்தின் கிளையின் கடைசியில் அமர்ந்து, கிளை ஆரம்பிக்கும் மரத்தின் பகுதியை வெட்டிக்கொண்டிருந்தார்.

அதாவது, நுனி மரத்தில் அமர்ந்து கொண்டு அடி மரத்தை வெட்டிக்கொண்டிருந்தார். அனைவரும் ஏளனமாகச் சிரித்தனர். காளிதாசன் மரத்தை வெட்டி முடித்ததும் பொதேர் என்று கீழே கிளையுடனே விழுந்தார்.

சந்தர்ப்பவசத்தால், ஒரு இளவரசியை மணக்க நேரிட்டது. இளவரசியோ அறிவுத் திறன் மிக்கவர். திருமணமான பிறகு இவரின் அறிவற்ற திறனைக் கண்டு மனம் வெதும்பிய இளவரசி, அறிவுச் செறிவுடன் வந்தால் மட்டுமே வாழ்க்கை நடத்தமுடியும் என்று பிரிந்து விட்டார்.

பிரிவுத் துயர் தாங்காத காளிதாசர் இளவரசியை நோக்கி. தான், அறிவு பெறச் செய்யவேண்டியது என்ன என்று கேட்டபோது, உஜ்ஜயினி மஹாகாளி தெய்வம் மட்டுமே தங்களுக்கு அறிவை வழங்க முடியும் என்று கூறி சென்றுவிட்டார்.

காளிதாசரும் காளியை அடைந்து அனுதினமும் அறிவுத் திறன் வேண்டி பிரார்த்தனை செய்வார். காளியும் அவரின் தூய்மையான பக்திக்கு இரங்கி, காளிதாசன் முன் தோன்றி, கையில் இரு கிண்ணங்களை வைத்துக்கொண்டு, காளிதாசனிடம் - ஒரு கிண்ணத்திலுள்ள பாயசத்தை அருந்தினால் அறிவு வரும், மற்றொரு கிண்ணத்திலுள்ள பாயசத்தை அருந்தினால் ஆற்றல் வரும், இதில் ஏதாவது ஒன்றை எடுத்துக்கொள் என்கிறாள் காளிதாசனோ. அறிவும் ஆற்றலும் இரண்டும் வேண்டும் என எண்ணிக்கொண்டு, காளியை நோக்கி, இரண்டில் எது நன்றாக இருக்கின்றதோ அதைக் குடிக்கின்றேன் என்று வெகுளியாகச் சொன்னார். மனமிரங்கிய காளி, காளிதாசனிடம் இரண்டு கிண்ணங்களையும் கொடுக்கிறாள். காளிதாசன் அந்த இரண்டு கிண்ணங்களில் இருந்த பாயசங்களையும் நொடிப்பொழுதில் குடித்துவிடுகின்றார் இப்பொழுது எனக்கு அறிவும் ஆற்றலும் வந்துவிடுமா என காளியை நோக்கிக் கேட்கிறார். சிரித்தபடியே காளியும், அவ்வண்ணமே நடக்கட்டும் என்று வரம் தந்து மறைகின்றாள் அருமையான சுவிகளை இயற்றும் திறன் பெற்று மொழியை ஆளும் திறன் பெற்றார் காளிதாசர்.

காளிதாஸர் பல அற்புதக் காவியங்களை இயற்றினார். (ரகுவம்சம், குமாரசம்பவம், சாகுந்தலம், மாளவிகாக்னிமித்ரம், மேகசந்தேசம் போன்றவை...)

காளிதாசனின் அறிவில் மகிழ்வு கொண்ட உஜ்ஜயினையை ஆண்டு கொண்டிருந்த, அறிவிற்சிறந்த போஜராஜன் தனது அவைப் புலவர்களில் மேலானவராக அமைத்துக் கொண்டார்.

நவரத்தினங்கள் என புகழ் பெற்ற ஒன்பது புலவர்கள் போஜராஜனின் அரசவையை அலங்கரித்திருக்கின்றனர். ( 1.தன்வந்தரி, 2.க்ஷபனகர், 3.அமரசிம்ஹன், 4.ஷங்கு, 5.வேதாளபட்டர், 6.கடகார்ப்பரர், 7.காளிதாசர்,8. உவராஹமிஹிரர், 9.வரருசி)

ஒரு சமயம் சம்ஸ்கிருத எழுத்துக்களான 'க' வரிசையை ஒரே கவிதையில் கொணர முடியுமா என போஜராஜன் கேட்க "க' வரிசை எழுத்துக்களைக் கொண்டு அழகாக கவிதை எழுதி தந்தார். அவரின் கவிதாவிலாசம் இதில் வெளிப்பட்டது.

அம்பிகையின் அருளை நேரடியாகப் பெற்றதால், காளிதாசன் அம்பிகையின் ரூபமாகவே கொண்டாடப்படுகின்றார். ஒரு முறை பவபூதி, தண்டி, காளிதாசர் ஆகிய பெரும் புலவர்களிடையே பெரும் போட்டி எழுந்தது. மூவருமே அம்பிகையின் அருள் பெற்றவர்கள், அம்பிகையையே முடிவு சொல்லட்டும் என்று அம்பிகையை மூவரும் அழைத்தனர், அம்பிகையும் தோன்றினாள். போட்டி மிகக் கடினமானது என்றாள். கவிக்கு ஓர் தண்டி, பண்டிதர்க்கு ஓர் பவபூதி என அறிவித்தாள் அம்பிகை. பின் தான் யார் என காளிதாசன் வினவ, காளி 'த்வமேவாஹம், த்வமேவாஹம், த்வமேவாஹம் ந ஸம்சய' என்றாள். நானே தான் நீ – சந்தேக –மேயில்லை என்றாள் அம்பிகை. காளியின் அம்சமே என்று கொண்டாடப்படுபவர் காளிதாசன்.

ஒரு சமயம் அரசவையில் அனைவரும் அமர்ந்து கொண்டு அளவளாவிக் கொண்டிருந்தபோது, வீரர்கள் சிலர் இளவரசனை அழைத்துவந்தனர்.

இளவரசனைப் பார்த்த அனைவருக்கும் அதிர்ச்சி. ஏனென்றால், இளவரசன் பிரமை பிடித்தவன் போல ஒரே திசையைப் பார்த்துக் –கொண்டு ஸஸேமிரா, ஸஸேமிரா என்று பிதற்றிக் கொண்டே –யிருந்தான். அதிர்ச்சி கொண்ட அரசன் என்னவாயிற்று எனக் கேட்க வீரர்களோ, காட்டில் தனியே சுற்றிக் கொண்டிருந்த வரை அழைத்து வருகின்றோம், அங்கிருந்தே இப்படித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார் என கூறினர்.

அரசனுக்கோ பெரும் வருத்தம் உண்டாயிற்று. சிறு வயது முதலே வீரம் நிறைந்த தன் குமாரன் இப்படி பித்துப் பிடித்தவன் போலாகிவிட்டானே? அடுத்த ராஜாவாக வரவேண்டியவன் இப்படி பிதற்றுகின்றானே,வேட்டைக்குப் போய் வருகின்றேன் என்று சொல்லிச் சென்ற ராஜகுமாரன் இப்படி ஆகிவிட்டானே என்று மிகவும் மனம் வெதும்பினான்.

காளிதாசன் இளவரசனைப் பார்த்தார்.

அவனோ, எதைப்பற்றி கேட்டாலும் ஸஸேமிரா என்றே சொல்லிக் கொண்டிருந்தான் ஸஸேமிரா என்றால் ஒன்றும் இல்லை என்று அர்த்தம்.

காளிதாசன் காளியை மனதில் நினைந்தார்.

பிறகு, இளவரசனைப் பார்த்து உனக்கு ஒரு கதை சொல்கின்றேன் கேள் என்றார்.

வடமொழி 'ஸ' என்னும் எழுத்தில் ஆரம்பித்து இந்தக் கதையைச், சொல்கின்றார்.

ஒரு பெரும் அரசை ஆண்டுகொண்டிருந்த அரசனுக்கு அழகே யுருவான இளவரசன் பிறந்தான். அந்த இளவரசன் ஒரு நாள் காட்டுக்கு வீரர்களுடன் வேட்டையாடச் சென்றான். ஒரு சமயம் ஆர்வமிகுதியால், விரைவாக சென்றமையால், வீரர்களை விட்டுப் பிரிந்தான் தனியே சுற்றிக் கொண்டிருந்த இளவரசனை ஒரு பசித்த புலி பார்த்து விட்டது. அந்தப் புலி இளவரசனைக் கொல்ல அவனைத் துரத்தியது. இதனைக் கண்ட இளவரசன் ஓட்டமெடுத்தான்.

இதுவரை சொன்னதும் இளவரசனிடம் ஒரு மாற்றம். ஸஸேமிரா என்று சொல்லிக் கொண்டிருந்தவன் 'ஸ' எனும் எழுத்தை விட்டு விட்டு 'ஸேமிரா, ஸேமிரா' என்று புலம்ப ஆரம்பித்தான்.

காளிதாசர், 'ஸே' எனும் எழுத்தில் தொடங்கி, கதையைத் தொடர்கின்றார்.

இளவரசன் ஒரு மிகப் பெரும் மரத்தின் மீது ஏறிக் கொண்டான் மரம் ஏறத் தெரியாத புலி அவனை விட மனமில்லாமல் கீழேயே காத்திருந்தது. மரம் ஏறிக் கொண்டிருந்த இளவரசன் மரத்தின் மேலே கரடி ஒன்றைக் கண்டு பயந்தான் அந்தக் கரடியை நோக்கி என்னை ஒன்றும் செய்து விடாதே, உன்னை நாடி வந்துவிட்டேன் என்று கூறினான். கரடியும் என்னை நாடி அபயம் தேடி வந்து விட்டாய் உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன் என்று உறுதி கூறியது. மனம் தெளிந்த இளவரசன் கரடியின் பாதுகாப்பில் இருந்தான். கீழே பார்த்தால், புலி இன்னமும் காத்துக் கொண்டேயிருக்கின்றது. இளவரசனுக்கோ களைப்பாக இருந்தது. கரடியைப் பார்த்து, நான் சற்று உறங்குகின்றேன். நான் கீழே விழுந்து விடாமல் நீ பார்த்துக் கொள் என்று சொல்லித் தூங்கிவிட்டான்.

இப்பொழுது இளவரசனிடம் இன்னும் ஒரு மாற்றம். ஸஸேமிரா என்று சொல்லிக் கொண்டிருந்தவன், ஸ & ஸே என்பனவற்றை விட்டு வெறும் 'மிரா மிரா' என்று கூற ஆரம்பித்துவிட்டான்.

அடுத்து, காளிதாசர் 'மி' எனும் எழுத்தில் ஆரம்பித்து கதையை தொடர ஆரம்பிக்கின்றார்.

கீழேயிருந்த புலி, கரடியைப் பார்த்து. மனிதர்கள் நம் எதிரிகள், ஆகவே இளவரசனை என்னிடம் தள்ளிவிடு, நாம் இருவரும் பாதி பாதி எடுத்துக்கொள்வோம் என்றது. கரடியோ, என்னை அண்டி வந்து விட்டவனை என்னால் கீழே தள்ள முடியாது என்று உறுதியாகச் சொல்லி விட்டது. நேரம் கடந்தாலும் புலி கீழேயே காத்திருந்தது. இளவரசனுக்கு முழிப்பு வந்தது. கரடிக்கோ களைப்பானது. கரடி இளவரசனை நோக்கி, நான் சற்று நேரம் தூங்குகின்றேன், என்னைப் பார்த்துக் கொள் என்று சொல்லிவிட்டு தூங்கிவிட்டது. கீழே காத்திருந்த புலி இளவரசனை நோக்கி,

எனக்கோ பசி மிகவும் அதிகமாகிவிட்டது. தூங்கிக்கொண்டிருக்கும் கரடியை நீ கீழே தள்ளிவிட்டால், கரடியை நான் சாப்பிட்டு அதற்கு பதிலாக உன்னை விட்டுவிடுகின்றேன் என்று கூறியது. புலியின் வஞ்சக வார்த்தையில் மயங்கிய இளவரசன், தூங்கிக் கொண்டிருந்த கரடியை கீழே தள்ளிவிட்டான்.

இப்பொழுது இளவரசனிடம் இன்னும் ஒரு மாற்றம். கண்களில் கண்ணீர் வர இளவரசன், தலையை மட்டும் ஆட்டிக்கொண்டு ஸ, ஸே, மி எனும் எழுத்துக்களை விட்டு, 'ரா, ரா, ரா,' என்று பிதற்ற ஆரம்பித்து விட்டான்.

காளிதாசர் 'ரா' எனும் எழுத்தில் ஆரம்பித்து, மறுபடியும் கதையை ஆரம்பித்து, நன்றி செய்தலுக்கு நன்றி செய்யும் குணத்தைப் போற்றவும் செய்து, கூற ஆரம்பித்தார்.

கரடியின் கீழே விழுந்து கொண்டிருந்தபோது, அனிச்சை செயலாய், ஒரு கிளையில் கை பட்டு, அக்கிளையை பிடித்துக் கொண்டு கீழே விழாமல் தப்பித்தது. மேலே வந்து, இளவரசனிடம் உனக்கு உதவி செய்த எனக்கு நீ செய்யும் உதவி இதுதானா எனக் கோபமாகக் கேட்டு, நீ விலங்குகளை விட கேவலமானவன். சிந்திக்கும் செயல் இழந்து பைத்தியமாக ஆவாய் என சாபமிட்டுவிட்டது. சாப விமோசனமாக இன்று நடந்ததை யார் உனக்குச் சொல்கின்றாரோ, நன்றியின் பெருமையை நீ எப்போது உணர்கின்றாயோ அன்று நீ தெளிவடைவாய் என்றும் கூறியது. அது முதல் இளவரசன் ஸஸேமிரா, ஸஸேமிரா என்று சொல்லிக் கொண்டிருக்க ஆரம்பித்துவிட்டான். கீழே காத்திருந்த புலி பசி மிகுதியால் வேறு இடத்திற்குப் போய்விட்டது.

கரடியோ இளவரசனை கீழே பத்திரமாக இறக்கிவிட்டு, வீரர்கள் இருந்த பகுதிக்கு கொண்டுவிட்டு சென்றுவிட்டது. வீரர்கள் இவனைப் பார்த்து என்ன நடந்தது எனக் கேட்க, பிரமைப் பிடித்தவனாக 'ஒன்றும் இல்லை' என்று பொருள்பட ஸஸேமிரா என்று கூற ஆரம்பித்தான். ஸஸேமிரா ஸஸேமிரா என்று சொல்லிக் –கொண்டிருந்த இளவரசனை வீரர்கள் அரசனிடம் சேர்ப்பித்தனர்.

இக்கதையைக் கேட்ட இளவரசனிடம் மேலும் நல்ல முன்னேற்ற மான மாற்றம். இளவரசன் தன் பழைய நிலைக்கு வந்துவிடுகின்றான். ஸஸேமிரா என்று சொல்லாமல், கண்களில் கண்ணீருடன் நன்றி செய்தலின் அருமைகளை உணர்ந்து கொண்டு, தான் செய்த தவறுக்கு மனம் வருந்தி காளிதாசனைக் கைகூப்பி வணங்கினான்.

மன்னனிடம் காளிதாசன், இக்கதையில் வரும் ராஜகுமாரன் வேறு யாரும் அல்ல. உன் குமாரனாகிய இந்த இளவரசன் தான் என்று கூறுகின்றார். ராஜகுமாரனின் பொலிவான நிலையில் பார்த்த மன்னன் மனம் மிக மகிழ்ந்து அளவற்ற பரிசுகளை காளிதாசனுக்கு வழங்குகின்றான்.

குமாரசம்பவம், மாளவிகாக்னிமித்ரம், மேக தூதம் போன்ற காவியங்கள் காளிதாசனால் இயற்றப்பட்டன.

காளிதாசன், சாகுந்தலம் என்னும் அற்புத காவியத்தை அமைத்தார். அக்காவியம் துஷ்யந்தன் சகுந்தலை – பரதன் விஸ்வாமித்திரர் என்ற பாத்திரங்களோடு அமையும்.

(மீது அடுத்த இதழில்)

**மூலிகைத் தென்றல்**

## தழுதாழை

முடக்கு வாதத்தை சரி செய்யும் ஒரு அதிசய மூலிகை.

தழுதாழை இலையும் பீசங்கு இலையும் சம அளவாக எடுத்து நிழலில் உலர்த்தி காயவைத்து இடித்து சலித்து பொடி செய்து இந்தப் பொடியில் மூன்று கிராம் எடுத்து இருமடங்கு தேன் ஊற்றி குழைத்து காலை மாலை இருவேளையும் நாற்பது நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வர உடலிலுள்ள வாத நீர் முழுமையாக நீங்கி இதன்மூலம் உடல் வலிகள் முழுவதும் நீங்கிவிடும்.

இந்த வைத்திய முறையை பயன்படுத்தும் பொழுது சிறிது உப்பு புளி காரத்தைக் குறைத்து இந்த வைத்தியத்தை கடைபிடித்து வந்தால் உடலில் உள்ள ரத்தம் சுத்தமடையும்.

ரத்தத்தில் உள்ள அழுக்குகள் நீங்கி உடலில் குளிர்ச்சி ஏற்படும் கபம் சார்ந்த நோய்கள் அனைத்தும் விலகி சுவாசம் சீராக நடைபெற இது உதவும்.

தழுதாழை ஒரு கைப்பிடி<br>நொச்சி இலை ஒரு கைப்பிடி<br>பழுத்த எருக்கிலை மூறை

இவைகளை ஒரு பாத்திரத்திலிட்டு மூன்று லிட்டர் தண்ணீர் ஊற்றி பாத்திரத்தை இதை வேகவைத்து இந்த மூலிகை கடு நீரில் ஐந்து நிமிடம் உடல் முழுவதும் இந்த மூலிகையின் நீராவி உடலில் படுமாறு கண்களை மூடிக்கொண்டு வேது பிடிக்க வேண்டும்.

உடலில் இருக்கின்ற வாதநீர் முழுவதும் வியர்வையின் மூலமாக வெளியேறி விடுகின்றது.

மூலிகை நீராவியில் வேதபிடிப்பதின் மூலம் மூலிகையின் உயிர்சத்து சுவாசத்தின் மூலமாக உடலுக்கு எளிதாக கிடைக்கின்றது.

இதனால் நுரையீரலில் இருக்கின்ற சளிகள் முழுமையாக நீங்கி விடுகின்றன.

தொண்டைக்கட்டு கபம் நுரையீரலில் இருக்கின்ற சளி இவைகள் நீங்குகின்றன.

முக்குணங்களில் வாத குணம் மிகுதியால் தோள்பட்டை பட்டைவலி முதுகு வலி மூட்டு வலி இடுப்பு தசைகளில் ஏற்படுகின்ற வலிகள் மேலும் உடல் முழுதும் ஏற்படுகின்ற அனைத்து வலிகளுக்கும் சரவாங்கி **(Rhaeumatoid Arthritis)** நோயால் பாதிக்கப்பட்ட மூட்டு வீக்கம் மற்றும் மூட்டு வலிகளுக்கும் நிவாரணம் தருகின்ற நல்ல வைத்திய முறை இதுவாகும்.

காற்றின் பாதிப்பால் ஏற்படும் அனைத்து விதமான வாத நோய் களையும் முதலில் வராத வண்ணம் தடுத்து நிறுத்தும் ஒரு மாபெரும் சக்தி தழுதாழையில் இருக்கிறது.

தழூதாழை இலைகளை, விளக்கெண்ணைய் விட்டு வதக்கி இளம் சூட்டில் சுளுக்கு ஏற்பட்ட இடத்தில் இந்த இலைகளை சிறிது நேரம் வைத்திருக்க சுளுக்கு நீங்கி விடும் மூட்டு வலிக்கும் இந்த வைத்திய முறையை செய்து வர இதனால் மூட்டு வலிகள் முழுமையாக நீங்கி விடும்.

தழூதாழை இலையை இடித்து சாறு பிழிந்து இதன் எடைக்குச் சமமாக இதனோடு நல்லெண்ணெய் சேர்த்து இதில் இரண்டு துளி வீதம் எடுத்து இரு மூக்கிலும் நசியமிட மூக்கடைப்பு குணமாகும்.

தழூதாழை இலையின் சாறும் விளக்கெண்ணெயும் சமமாக கலந்து தைலப் பதமாகக் காய்ச்சி வலியுள்ள மூட்டுகளின் மீது தடவி வர மூட்டு வலி நீங்கும்.

தழூதாழை இலை சாரோடு சமமாக விளக்கெண்ணெய் சேர்த்து இதில் பதினைந்து மில்லி எடுத்து அதிகாலை வேளையில் பருகி வர சர்க்கரை நோயானது சமநிலைக்கு வந்துவிடும்.

இந்த வைத்திய முறையை பயன்படுத்தி வரும் காலங்களில் மூலிகைச் சாற்றினை பருகிய பின் குறைந்தது நான்கு மணி நேரம் உணவு உண்ணக்கூடாது இதை கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

தழூதாழையின் இலைச்சாற்றை பத்து மில்லி எடுத்து காலை இரவு இருவேளையும் சாப்பிட்டு வர ஒரே நாளில் காய்ச்சல் விலகி விடும்.

தழூதாழை இலைகளை விளக்கெண்ணையில் இட்டு வீக்கம் ஏற்பட்ட இடத்தில் வைத்து கட்டி வைக்க ஆண்களின் விரை வீக்கம் மற்றும் நெறி கட்டிய பாதிப்புகள் விலகி விடும்.

தழூதாழையின் வேரை நல்லெண்ணையுடன் சேர்த்து காய்ச்சி வவியுள்ள மூட்டுகளில் மீது இதை தடவி வர, மூட்டு வலி மற்றும் மூட்டு வீக்கங்கள் முழுமையாக குணமாகும்.

தழூதாழை வேரை நீரிலிட்டு கொதிக்கவைத்து இதில் சிறிது பனங்கற்கண்டு சேர்த்து, இருவேளையும் பருகி வர இரண்டொரு நாட்களில் சிறுநீர்த்தாரை எரிச்சல் வெகு எளிதாக நீங்கிவிடும்.

தழூதாழை இலைகளை சிறிது நீரிலிட்டு கொதிக்க வைத்து, இதில் சிறிது பனங்கற்கண்டு சேர்த்து பருகிவர. பருவநிலை மாறுபாட்டால் ஏற்படும் உடல் நல குறைபாடுகள் அனைத்தும் முழுமையாக நீங்கும்.

தழுதாழை இலையை இடித்து சாறு பிழிந்து ஒரு மண் சட்டியில் ஊற்றி இதை விறகு அடுப்பில் எரித்து சாறு சுண்டி மெழுகு பதத்திற்கு வரும் பொழுது இதை வலியுள்ள இடத்தில் பற்றாக போட்டு வர எப்பேர்ப்பட்ட வலிகளும் முழுமையாக நீங்கும்.

## தகவல் தென்றல்

★ நம்மை போலவே, மற்ற ஜீவன்களின் காதல் மொழியும், அவை வெளிப்படுத்தும் சமிக்ஞையும் சுவாரஸ்யமானவை. அவற்றில் சில...

மேகம் கருக்கி மின்னலடிக்கும் நேரத்தில், குதூகலமாகும் ஆண் மயில்கள், தன் தோகையை விரித்தாடி நடனமாடுவது, பெண் மயில் களை கவர்ந்திழுப்பதற்கும் தான்.

'கொக்கரக்கோ' என சிலிர்த்தபடியே, கோழியின் அருகே சென்று கூவும் சேவலின் காதல் கீதத்தில், ராகத் தோடு தாளமும் சேர்ந்திருக்கும்.

பசி, தாகம் மறந்து ஜோடி தேடி சென்று தவம் கிடக்கும் ஆண் நாய்களை நீங்கள் அடிக்கடி பார்த்திருப்பீர்கள்.

கடலில் வாழும் பல்சுணை புழுக்கள், தன் இணையிடம் காதலை வெளிப்படுத்தும் கடல்பரப்புக்கு மேலே வந்து குப்புற கவிழ்ந்த படியே நீச்சலடித்து சாகசம் செய்யும்.

சினிமாக்களில் ஹீரோயினை பார்த்ததும், காதல் அம்பு தைத்து விட்டதாக ஹீரோ பிதற்றுவார். ஆனால் உண்மையிலே நத்தையின் உடலில் அம்புப்பை என்ற ஓர் உறுப்பு உள்ளது. இதில், அம்பு போன்ற நீண்ட மெல்லிய சற்று கடினமான அமைப்பை, ஆண் நத்தையானது இனப்பெருக்க காலத்தில், பெண் நத்தையை நோக்கி வீசும். அந்த அம்பால் தாக்கப்பட்டதும், பெண் காதலுக்கு பச்சை கொடி காட்டிவிடும்.

மழைக்காலங்களில் தவளை சத்தமிட்டு ரூயட் பாடுவது, தன் இணையை அழைக்கும் ரகசிய மொழி. இதற்காக பிரத்யேக குரல் பைகள் அதற்குண்டு.

வலையின் நடுவே இருக்கும் பெண் சிலந்தியை தேடி செல்லும் ஆண், 'காபரே' நடனத்தை போலவே உடலை வளைத்து, கால்களை அசைத்து, தன் திறனை வெளிப்படுத்தி, காதல் நடனமாடும்.

நமக்கு குறி சொல்வதாக நம்ப வைக்கப்பட்ட, ஆண் பல்லியின் 'கெவிலி' சத்தம், எதிர்பாலினத்தை கவர்வதற்கான குறிப்பு மொழி. இனி பல்லி சத்த மிட்டால், அதை தொந்தரவு செய்து விடாதீர்கள்.

பூச்சிகளின் காதல் மொழி சற்று வித்தியாசமானது. இரையை தேடி பிடித்து, தன் இணைக்கு கொடுத்து, காதலை வெளிப்படுத்து –வதில் அவை கில்லாடி.

வண்ணத்துப்பூச்சியின் உடலில் ஒருவகையான வாசனை செதில்கள் உள்ளன. தன் இணையின் அருகில் செல்லும் போது, தன் உடலிலுள்ள வண்ணங்கள் தெரியும் வகையில் சிறகை விரித்து, வாசனையை வெளிப்படுத்தி கவர்ந்திழுக்கும்.

ஆண் ஈக்கள் சிறகுகளை ஒருவிதமாக அதிர்வித்து கொண்டு பறந்த படியே, பெண் ஈக்களை கவர்ந்திழுக்கும். மின்மினி பூச்சிகள், தம் ஒளிவீசும் அமைப்பினால், ஒன்று கொன்று சிக்னல் கொடுத்து கொள்ளும்.

ஆய்வாளர்கள், ஒரு புத்தி சாலி தலையணையை உருவாக்கியு ள்ளனர், இது உறங்குபவர்களின் தலை இருக்கும் நிலையை கண்டறிந்து. சரியான கோணத்திற்கு மாற்றுகிறது. இது கழுத்து வலி மற்றும் முதுகெலும்பு பிரச்னைகளைத் தவிர்க்கிறது.

★கடந்த 100 ஆண்டுகளாக, சுத்திகரிக்கப்பட்ட கரியை ரப்பருடன் சேர்ப்பது அதன் பல மடங்கு அதிகரிக்கும் என்பதை உற்பத்தியா ளர்கள் அறிந்திருந்தனர். ஆனால், அதன் பின்னுள்ள அறிவியல் ஒரு மர்மமாகவே நீடித்தது. ஆய்வாளர்கள் இந்தப் புதிரை விடுவித்துள்ளனர்.

மேம்பட்ட கணினி ஒத்திகைகள் மூலம், அழுத்தத்தின் கீழ் ரப்பரும் கரித் துகள்களும் வெவ்வேறு விதமாக உருமாறுகின்றன என்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த உருமாற்ற வேறுபாடே ரப்பரின் மீதான அழுத்தத்தைச் சீராகப் பகிர்ந்து, கிழிசல்களைத் தடுத்து அதன் உறுதியை அதிகரிக்கிறது. இக்கண்டுபிடிப்பால், 'ஊகத்தின்' அடிப்படையிலான பரிசோதனை முறையிலிருந்து விடுபட்டு, இனி தெளிவான கோட்பாடுகள் வாயிலாக ரப்பர் தயாரிக்கப்படலாம்.

வணிக ரீதியாக இது பெரும் புரட்சியை ஏற்படுத்தும். டயர் தயாரிப்பாளர்கள் தரம் அறிய மேற்கொள்ளும் விலையுயர்ந்த சோதனைகள் இனி குறையும்.

இந்தத் தெளிவான முறையால், வீணாகும் மூலப்பொருட்களைக் குறைப்பதோடு, எரிபொருளைச் சேமிக்கும் மேம்பட்ட டயர்களை விரைவாக வடிவமைக்க உதவும்.

ஒரு பொருளின் உட்புற இயக்கத்தை அரைகுறையாகப் புரிந்து கொண்டே, அதைக் கொண்டு நாம் உலகளாவிய போக்குவரத்து அமைப்பைக் கட்டமைத்துள்ளோம்.

பல நேரங்களில் புதியவற்றைக் கண்டு பிடிப்பதை விட, புழக்கத்தில் உள்ள பழையவற்றைக் முழுமையாகப் புரிந்து –கொள்வதில் தான் அறிவியல் உண்மையான பாய்ச்சலை நிகழ்த்துகிறது.

★ அதிகம் ஆராயப்பட்டவை என்றால், அவை புவியீர்ப்பு விசையும். ஒளியுமாகத் தான் இருக்கும். இருந்தாலும் அவை இன்றும் ஆச்சரியங்களைத் தந்தபடியே இருக்கின்றன. உதாரண –த்திற்கு, புவியீர்ப்பு விசை, ஒளியின் மீது மிக மெல்லிய மாற்ற –ங்களை ஏற்படுத்துகிறது. இதை துல்லியமாக அளக்கவும், அந்த அளவையை பயன்படுத்தவும் முடியும் வெளியான ஆய்வுகள் கூறுகின்றன.

ஒளியின் பயணத்தை புவியீர்ப்பு விசை சற்றே பாதிக்கிறது. பூமிக்கு அடியில், பெரிய நீரோட்டம், தாதுப் பாறைகள், புவிக் குழம்புகள் உள் ளிட்டவை புவியீர்ப்பின் அடர்த்தியை பாதிக்கிறது. இதனால். மேற் பரப்பில் பயணிக்கும் ஒளியை ஈர்க்கும் விதமும்

மாறுகிறது. இந்த மாறுதல்களை துல்லியமாக அளக்க கருவியை உருவாக்க வேண்டும் என்கிறது சயன்டிபிக் ரிப்போர்ட்ஸ் ஆய்வுக் கட்டுரை.

ஒளியை மையமாக வைத்து உருவாக்கப்படும் புவியீர்ப்புமானி, நிலத்தடி நீர்மட்டம் குறைவது, எரிமலைக் குழம்பு நகர்வது, மறைந்திருக்கும் கனிம வளங்கள் மற்றும் பூமிக்கடியில் சேமிக்கப் பட்ட கார்பன்–டை–ஆக்சைடு ஆகியவற்றை நம்மால் துல்லியமாக அறிய முடியும். புவியீர்ப்பை அளக்க தற்போதுள்ள கனமான கருவி களுக்குப் பதிலாக, புதிய ‘போட்டானிக்’ சென்சார்களைக் கொண்ட கருவி மிகச் சிறியதாக இருக்கும், வணிக ரீதியாகவும் இதற்குப் பெரும்

இதற்குப் பெரும் வரவேற்பு உண்டு. இவற்றை நீர்மூழ்கிக் கப்பல்கள் அல்லது விமானங்களில் எளிதாகப் பொருத்த முடியும்.

இருப்பினும், இந்தத் தொழில்நுட்பம் இன் னும் ஆய்வக நிலை யிலேயே உள்ளது. எத்தனை வளர்ந்த துறைகளாக இருந்தாலும், அவற்றிலும் புதிய திருத்தங்களுக்கு எப்போதும் இடமுண்டு என்பதையே இக்கண்டுபிடிப்பு உணர்த்துகிறது.

**மருத்துவத் தென்றல்**

## வெப்ப வாதம்

கோடைக்காலம் விட்ட நிலையில், வெப்பம் தொடர்பான நோய் களில், மூளை, நரம்பு மண்டலத்தைப் பாதித்து, உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் அவசர நிலையாக ‘வெப்ப வாதம்’ உள்ளது.

உடலின் வெப்ப நிலையை நிலையை சீராக பராமரிக்கப்படா –விட்டால், நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு, வெப்பவாதம் ஏற்படுகிறது.

உடலின் உஷ்ணம் 40 டிகிரி சென்டிகிரேடுக்கும் மேல் உயர்ந்து, அதிகப் படியான வெப்பத்தை உடலால் வெளியேற்ற முடியாத போது, வெப்பவாதம் ஏற்படுகிறது.

பொதுவாக, மூளையில் உள்ள, ‘ஹைபோ தாலமஸ்’ எனும் பகுதி, வியர்வை மூலமும், ரத்த நாளங்களை விரிவடையச் செய்வதன் மூலமும் உடலின் வெப்பநிலையைச் சீராகப் பராமரிக்கிறது.

அதிக வெப்பத்தில் இருப்பது, நீர்ச்சத்து குறைபாடு, தொடர்ந்து கடுமையான உடல் உழைப்பில் ஈடுபடுவது போன்ற நேரங்களில், இந்த அமைப்பு செயலிழந்து விடுகிறது.

இதன் விளைவாக செல்கள் பாதிக்கப்பட்டு, உடல் முழுவதும் வீக்கம், நரம்பியல் கோளாறுகள் ஏற்படுகின்றன.

சாதாரண தசைப்பிடிப்பில் தொடங்கி, குழப்பமான மனநிலை, தசைப் பிடிப்பு, தீவிர சிறுநீரக பாதிப்பு வரை வரலாம்.

வெப்ப வாதம் ஒருவரின் மனநிலையைப் பாதிக்கலாம். முதலில் குழப்பம், எரிச்சல், நிதான பின்மையுடன் துவங்கும்.

தீவிர நிலையில், வலிப்பு, நினைவிழப்பது, உயிரிழப்பும் ஏற்படலாம்.

உடல் உஷ்ணம் அதிகரிப்பது, நரம்பு செல்களின் ஒருங்கிணைந்த செயல்பாட்டை குலைக்கிறது.

செல்களில் உள்ள புரதங்களின் அமைப்பு சிதைகின்றன.

மூளைத் திசுக்களில், திரவம் சேர்ந்து, வீக்கம் ஏற்படலாம்.

மூளைக்கு ஆக்சிஜன், ரத்த ஓட்டம் குறைந்து ஞாபக மறதி, பக்க வாதம், நினைவிழப்பு ஏற்படும் அபாயமும் உள்ளது.

கோடைக்காலம் விட்ட நிலையில், வெப்பம் தொடர்பான நோய் களில், மூளை, நரம்பு மண்டலத்தைப் பாதித்து, உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் அவசர நிலையாக 'வெப்ப வாதம்' உள்ளது.

வெப்பத்தால் எளிதில் பாதிக்கப்படக்கூடியது, சிறுமூளைப் பகுதி. இதனால் தான், வெப்ப வாதத்தில் இருந்து மீண்டவர்களுக்கு, உடல் இயக் கம் சார்ந்த பாதிப்புகள் தொடர்ந்து இருக்கும்.

மனநலப் பிரச்னைகள், மனச்சோர்வுக்கு உபயோகிக்கும் சில வகை மருந்துகள் வியர்வையைத் தடுக்கும். இதனால் உடல் வெப்ப நிலையை, கட்டுப்படுத்தும் திறன் குறையும்.

இவர்களைத் தவிர, முதியவர்கள், குழந்தைகள், நரம்பியல் கோளாறு உள்ளவர்களுக்கு அதீத வெப்பத்தால் பாதிப்பு அதிகம் உள்ளது.

ஏற்கனவே பக்கவாதம், மூளை நரம்பு தேய்மானம் போன்ற நோய் உள்ளவர்களுக்கு, உடல் வெப்பத்தை கட்டுப்படுத்தும் அமைப்பு செயல்படாது என்பதால், அவர்கள் எளிதில் வெப்பத்தால் பாதிக்கப்படுவர்.

போதுமான அளவு தண்ணீர் குடிக்காதது, வெயிலில் அதிகமாக உடற்பயிற்சி செய்வது, வெயிலில் வேலை பார்ப்பவர்கள், விளையாட்டு வீரர்கள், காற்றோட்டம் இல்லாத இடங்களில் இருப்பவர்கள் வெப்ப வாதத்தால் எளிதில் பாதிக்கப்படலாம்.

தலைவலி, தலை சுற்றல், குமட்டல், அதிக சோர்வு போன்ற அறிகுறிகளை அலட்சியப்படுத்தக் கூடாது. அதிக உழைப்பால் ஏற்படும் வெப்பவாதத்தில் அதிகமாக வியர்க்க வாய்ப்பிருந்தாலும், பெரும்பாலான வெப்பவாதங்களில் வியர்க்கவே வியர்க்காது.

சருமம் சூடாகவும் வறண்டும் காணப்படும்.

சீரற்ற இதயத் துடிப்பு அதிகரிப்பு, மூச்சு விடுதலில் சிரமம் போன்றவையும் இருக்கும்.

பாதிக்கப்பட்டவரை நிழலான, 'ஏசி' அறைக்கு மாற்றுவது, இறுக்கமான உடைகளைத் தளர்த்துவது குளிர்ந்த நீர், ஐஸ் கட்டி களால் ஒத்தடம் தருவது அவசியம்.

உடலை குளிர்விப்ப தில் ஏற்படும் தாமதம் மூளையை பாதிக்கும். நீர்ச்சத்தை ஈடு செய்யவும் ரத்த ஓட்டத்தைச் சீராக்கவும் நரம்பு வழியாக திரவங்கள் செலுத்த வேண்டியிருக்கும்.

வெப்ப வாதம் பாதித்தால், உயிரைக் காப்பாற்ற, மூளையை பாதுகாக்க, ஒவ்வொரு திமிடமும் மிகவும் முக்கியம்.

எனவே அறிகுறிகள் தெரிந்தால், அலட்சியம் செய்யாமல், மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுவது மிகவும் அவசியம்.

## பாரத கல்விக் கூடங்கள்

சமீபத்தில் 'அழகிய மரம்' என்ற புத்தகத்தின் review படிக்க நேர்ந்தது. அதில் சில புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. விவரங்கள் பின்வருமாறு:

*1800* களில் இந்தியக் கல்வி பிரிட்டனை விட பல மடங்கு மேலானதாக இருந்துள்ளது. இந்தியாவில் இருந்த வழி முறையே இங்கிலாந்தில் அனைவருக்குமான கல்வி முறையைக் கொண்டு வர வழிகாட்டியாக இருந்தது.

அப்போது எடுக்கப்பட்ட கணக்கின்படி சென்னையில் கல்வி பயின்றோர் பற்றிய குறிப்பு:–

பிராம்மணக் குழந்தைகள் – *410*

வைசியக் குழந்தைகள் – *961*

4ம் வருணத்துக் குழந்தைகள் – *3678*

பிற ஜாதியினர் – *447*

இஸ்லாமியர் – *153*

**தமிழகத்தின் பிற இடங்களில்**

பிராம்மணக் குழந்தைகள் – *11,147* பேர்

நான்காம் வருணத்தவர் – *54,195* பேர்

கல்வி கற்றதாக பிரிட்டிஷார் ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

மாணவர்கள் *13* வயதையும் அடையும் முன்னரே பல்வேறு துறைகளில் அபார தேர்ச்சி அடைந்தனர். இதிகாசம், புராணம், இலக்கியம்,இலக்கணம், கவிதை, காவியம், வாள்சண்டை, களரிப்பயட்டு, தாவரவியல், கடல் பயணம், சதுரங்கம், தர்க்க சாஸ்திரம், ஜோதிடம், சட்டம் என பல துறைகளில் பாடங்கள் கற்றுத் தரப்பட்டன.

நெல்லூர் மாவட்ட கலெக்டர் 1823 ஜூன் 23 அன்று வருவாய்த் துறைக்கு அனுப்பிய கடிதத்தில்

கிரந்தப் பள்ளிகள் – 642

வேதப் பள்ளிகள் – 83

வானவியல் பள்ளிகள் – 5

சட்டப் பள்ளிகள் – 15

ஜோதிடப் பள்ளிகள் – 3

ஆங்கிலப் பள்ளி – 1

அரபுப் பள்ளி – 50

தமிழ்ப் பள்ளி – 4

ஹிந்துஸ்தானி இசை – 1 என 804 பள்ளிகளை பட்டியலிடுகிறார்.

மன்னர்கள், செல்வந்தர்கள் உட்பட ஒட்டு மொத்த சமூகமும் கல்வி மையத்துக்கான பொருளாதார உதவிகளை வழங்கியுள்ளன.

வர்த்தக நோக்கில் உள்ளே நுழைந்த **British**, பாரம்பரிய பள்ளிக் களுக்கான அரசு உதவிகள் அனைத்தையும் நிறுத்திவிடவே, குழந்தைகள் கட்டணம் செலுத்திப் படிக்க வேண்டிய சூழ்நிலை உருவானது.

இந்த நூலில் அக்கால கட்டத்தில் படித்த மாணவர்களின் எண்ணிக்கை சாதிவாரியாக, மத வாரியாக பல அட்டவணைகளில் அரசு ஆவணங்களின் சான்றுகளின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மொத்த மாணவர்களில்

பிராம்மணர்கள் – 19.4%

க்ஷத்திரியர்கள் – 0.31%

வைசியர்கள் – 8.78%

நான்காம் வருணத்தவர் – 49.58%

இஸ்லாமியர் – 6.94%

இப்படியிருக்க, நான்காம் வருணத்தவருக்கு 2000 ஆண்டுகளாக கல்வி மறுக்கப்பட்டது என்ற பொய்யான தகவல்கள் பரப்பப்பட்டு வருவது வருந்துவதற்கான விஷயம்.

பல வகைகளில் சிறப்புற்றுப் பறந்து விரிந்த ஆலமரத்தை பிரிட்டிஷார் தங்கள் விருப்பத்துக்கேற்ப வெட்டிச் சாய்த்து, மக்கள் மனத்தில் அடிமைத்தனத்தை வேரூன்றச் செய்தனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

அழகிய மரம் எனும் இந்த நூல் கிடைக்குமிடம்−−தமிழினி பதிப்பகம். **Spencer plaza ground Floor, Anna salai, Chennai** –2

## 7.தொலைந்து போன பாரம்பரியங்கள்

டாக்டர் எஸ்ஸெஸ்பி

அன்பு– அரவணைப்பு – ஆதரவு – பாதுகாப்பு – நம்பிக்கை– நீதி – நியாயம் ஆகியவை சமுதாயத்தின் கடைக்கோடி மனிதனுக்கும் கிடைக்க வேண்டும் என்பது தான் சமூக நீதியாகும்.

இதற்காக நமது முன்னோர்கள் நமக்கு உருவாக்கித் தந்த பாதுகாப்பு கவசம் தான் ஜாதி அமைப்பாகும்.

ஹிந்து சமுதாயத்திற்குக் கிடைத்து வந்த இந்த பாதுகாப்பு இன்று திட்டமிட்டு சிதைக்கப்பட்டு வருகின்றன. இதனால் ஒவ்வொரு ஹிந்துவும் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள வேண்டிய துர்பாக்கியநிலையில் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

இதனால் தான் –

ஒரு ஹிந்து பொது வெளியில் தன்னை ஒரு ஹிந்துவாய் அடையாளப் படுத்திக் கொள்ள அச்சப்படுகின்றான்.

இது சத்தியமான உண்மை.

பெரும்பான்மை ஹிந்துக்கள் பொது வெளியில் தன்னை ஹிந்துவாய் அடையாளப்படுத்திக் கொள்ள அச்சப்படும் சூழ்நிலை காரணமாகவே தங்களை மதசாரர்பற்றவர்களாய் காட்டிக் கொள்கின்றார்கள்.

இது யதார்த்தமான உண்மை.

எதையும் மத ரீதியாக சிந்திக்க அச்சப்படும் சூழ்நிலை காரணமாகவே பெரும்பான்மையான ஹிந்துக்களின் அடிப்படை சிந்தனையே மத சார்பற்ற ரீதியாக மாறி விட்டது.

இதை மாற்றி அமைக்காமல் – தனிப்பட்ட ஹிந்துவின் பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாய் உருவாகியுள்ள இந்த அச்சத்தினைப் போக்காமல்– ஹிந்து ஒற்றுமையை உருவாக்குவது மிக மிக கடினமானதாகும்.

ஹிந்து ஒற்றுமைக்காக குரல் கொடுக்கும் ஹிந்து அமைப்புக்கள் இந்த அடிப்படை உண்மையை உணர வேண்டும்.

அன்பு– அரவணைப்பு – ஆதரவு – பாதுகாப்பு – நம்பிக்கை– நீதி – நியாயம் ஆகியவை தெருக் கோடியில் வாழும் கடைக்கோடி ஹிந்து விற்கும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

ஹிந்து அடையாளங்களுடன் போனாலே பரீட்சையில் பெயிலாக்கி விடுவார்கள் என்கின்ற அச்சம் இருக்கும் போது எப்படி பொது வெளியில் ஒரு ஹிந்துவாய் காட்டிக் கொள்ள முடியும்?

திப்பு சுல்தான் காலத்தில் கர்நாடகத்திலிருந்து தன் ஜாதி ஜனங்களை அழைத்துக் கொண்டு தென் தமிழகத்திற்கு வந்து குடியேற வைத்தார்கள் அன்றைய ஜாதித் தலைவர்கள்.

போக்குவரத்து வசதிகள் இல்லாத அந்த காலத்தில் மாட்டு –வண்டிகளிலும், கால்நடையாகவும் ஆயிரக்கணக்கான பேர்களை அழைத்துக் கொண்டு இடம் பெயர்வதென்றால் அது சாதாரணமான விஷயமா என்பதை நிதானமாய் அமர்ந்து ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்.

500 –600 கிலோ மீட்டர் தூரம் – பச்சிளம் குழந்தைகள் பெண்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் – எத்தனை பகல் இரவு நாட்கள் – எல்லாவற்றையும் யோசித்துப் பாருங்கள்.

– அத்தனை பேருக்கும் எப்படி உணவிட்டார்கள்?

– அத்தனை பேரையும் இரவு பாதுகாப்பாய் எங்கே தங்க வைத்தார்கள்?

– அது போர்காலமாய் இருந்ததால் வழி நெடுகிலும் எத்தனை பேர் ஆயுதம் தாங்கி பாதுகாப்பு கொடுத்திருப்பார்கள்?

வீரம் செறிந்த இந்த வரலாற்றை தனது ஜாதி ஜனங்களிடம் இன்றைய ஜாதி தலைவர்கள் எடுத்துரைத்திருப்பார்களா?

இரவு பகல் தூங்காமல் தம் ஜாதி மக்களை பாது காத்து வழி நடத்தி அழைத்து வந்த தன்னலமற்ற அந்த ஜாதி தலைவர்கள் இன்று இல்லாமல் போய் விட்டார்கள். இன்றைய ஜாதி தலைவர்கள் அரசியல் ஆதாயம் தேடுபவர்களாய் ஆகி விட்டார்கள்.

500 – 600 கிலோ மீட்டர் தூரம் தம் ஜாதி தலைவர்களை நம்பி வந்த அந்த ஜாதி ஜனங்கள் உயிருக்குப்பயந்து அவ்வாறு வரவில்லை என்பதை முதலில் நாம் அனைவரும் உணர வேண்டும்.

அவர்கள் உயிருக்குப் பயந்திருந்தால் மதம் மாறி அந்த கர்நாடாகவிலேயே தொடர்ந்து வாழ்ந்திருப்பார்கள். ஹிந்துவாய் வாழ்வோம் என்கின்ற உறுதியில் அவர்கள் தங்களின் ஜாதி தலைவர்களைப் பின் தொடர்ந்தார்கள்.

ஏனென்றால் –

அன்று ஜாதி அவர்களின் பாதுகாப்பு கவசமாய் இருந்தது. அன்பு–அரவணைப்பு – ஆதரவு – பாதுகாப்பு – நம்பிக்கை– நீதி – நியாயம் ஆகியவற்றை தமது ஜாதி தங்களுக்கு அளிக்கும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு உத்வேம் அளித்தது.

இன்று அந்த ஜாதி என்னும் பாதுகாப்பு கவசம் சிதைக்கப்பட்டு விட்டதால் தான் ஒவ்வொரு ஹிந்துவும் பொது வெளியில் தன்னை ஹிந்து என்று சொல்லிக் கொள்ள அச்சப் – படுகின்றான்.

இதை ஹிந்து சமுதாயம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

(தொடரும்)

# SRI ARUMUGAM'S



**TWO ROSE** Sparklers, Chakkars, Flower Pots, Fancy items, Gift boxes, Color Matches and Roll Caps **TWO ROSE**

TRADEMARK ® TWO ROSE REGISTRATION No. 397076

**SRI ARUMUGA BHAVAN**
No.212, Amman Koil Patti Middle Street,
Post Box No. 136, **SIVAKASI - 626 189.**
Website : www.arumugamfireworks.com
E-mail : arumugamfw.svk@gmail.com
Off : 04562-277277, 278277




**SRI ARUMUGAM FIREWORKS (P) LTD., SIVAKASI.**



Printed by **SRI GANESH INDUSTRIES,** 2/D-4, Arumugam Road, Sivakasi
and Published by **Dr. V.K.S.SIVASAKTHI BALAN,** 65, Kuttiananjan Street,
Sivakasi on behalf of **GURUKULAM,** Sakthi Clinic Compound, Murugaiahpuram,
Vishwanatham - 626 189. Editor : **Dr. V.K.S.SIVASAKTHI BALAN**

GURUKULA THENDRAL ( Tamil Monthly) REGISTERED
Registered with Registar of Newspaper of India No : 63702/95
Postal Registration No. VGR/061/2024-2026
Posted at Sivakasi East Post Office on 16.08.2026

*One Place for All Fashion Needs!!*

- *Fashion Jewellery*
- *Cosmetics*
- *Handbags*
- *Celebration Items*
- *Head Accessories*
- *Gifts*

KOSALA

# Kosala Trends

*... A Trend Setting Centre for Girls and Women*

Opp. Sivakasi, Arulmigu Sri Mariamman Kovil Theppam

Follow us on
kosala trends



# TOYS HOUSE



Fun Unlimited

Coolest Toys for Coolest Kids



34, P.K.S.A. Arumuga Nadar Road, Sivakasi.

Cell: 94431 56277
94431 21277